# கனடா-காரை கலாசார மன்றம்

## தமிழ்மொழித் திறன் போட்டி – 2022

### பேச்சு – உயர் பிரிவு (10ஆம் 11ஆம் 12ஆம் தர மாணவர்கள்)

# குறள் கூறும் நட்பு

அறநூல்களிலே மிகவும் சிறந்தது திருக்குறள். இது மாந்தர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களைப் பற்றிச் சிறப்பாகக் கூறுகிறது. இதனால் இந்நூலை உலகமே போற்றுகிறது. திருக்குறளைப் பொதுமறை என்றும் கூறுவர். இத் திருக்குறள் நட்புப் பற்றி சிறப்பாகக் கூறுகின்றது.

“உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு” என வள்ளுவர் உண்மை நட்பின் சிறப்பைக் கூறுகிறார். அதாவது நாம் உடுத்தியிருக்கும் உடையானது நழுவும் போது நமது கைகள் தாமாகவே விரைந்து அதைப் பற்றிக் கொள்கின்றன. அதைப் போன்றே நண்பர்களுக்குத் துன்பம் நேரும் போது விரைந்து உதவுவதே உண்மை நட்பாகும். ஒரு சிறந்த நூலை மீண்டும் மீண்டும் படிக்கப் படிக்க நற்கருத்துக்கள் தோன்றும். அப்புதிய கருத்துக்கள் நம் அறிவுக்கு இன்பம் தரும். அவ்வாறே நல்ல பண்புடையோரது நட்பானது பழகப் பழக மனதுக்கு இனிமை தரும். இதனை வள்ளுவர் தனது குறளில் “நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு” எனச் சிறப்பாக விளக்குகிறார்.

கண்டதும் சிரித்துப் பேசி மகிழ்வது மட்டும் நட்பல்ல. நண்பர் அறம் மீறித் தவறு செய்யும் போது அதனைத் தடுத்து நிறுத்தி அறிவுரை கூறுவதே இனிய நட்பாகும். இதனை வள்ளுவர் “நகுதல் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு” என்ற குறள் மூலம் அழகாக விளக்குகின்றார்.

இனிய நட்பைத் தேடிப் பெறுவோம். என்றும் மகிழ்வாய் வாழ்வோம்.